செய்தி வெளியீடு எண்: 011 நாள்: 03.01.2018

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து 03.01.2018 அன்று ஆய்வு செய்தார். எல்காட் நிறுவனத்தில் அனைத்து எல்கோசெஸ் தொழில் நுட்ப பூங்காக்களிலும் நிலங்களை தொழில் நுட்ப நிறுவனங்களுக்கும் விரைவில் ஒதுக்கீடு செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் இந்த தொழில் நுட்ப பூங்காக்களில் தேவையான உட்கட்மைப்பு வசதிகளை ஏற்படுத்தி அவை நன்கு பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். எல்காட் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து வழங்கப்படும் பள்ளி மாணவர்களுக்கான மடிக்கணினி (லேப்–டாப்) வழங்குவதில் இந்த ஆண்டு எட்டப்பட்ட குறியீடுகளை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர், 2018ம் ஆண்டுக்கான மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்குரிய அரசாணை பெற்றவுடன் துரிதமான நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட கால கெடுவுக்குள் விநியோகம் செய்திட நடவடிக்கை எடுத்திடவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். மடிக்கணினி (லேப்–டாப்)களை வழங்குவதில் எந்தவித தாமதமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எல்காட் மூலம் நிறைவேற்றப்படும் அரசின் பிற துறைகள் தொடர்பான கணினிமயமாக்கல் பணிகளில் எவ்வித குறைபாடுகள் நேராதவாறும் உரிய காலத்தில் அப்பணிகள் முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எல்காட் நிறுவனத்தின் வருவாயினை மேம்படுத்தும் வகையில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளையும் விரைந்து செயல்படுத்தி கடந்த ஆண்டுகளை விட அதிக அளவில் குறியீடுகளை நிரைவேற்ற வேண்டும் என்றும் நடப்பு நிதி ஆண்டின் இறுதிக்குள் கணிசமான முன்னேற்றத்தினை எட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

Smart Class செயல்படுத்தவதற்காக சம்மந்தப்பட்ட துறையினருடன் கலந்தாலோசித்து அத்திட்டத்தினை எல்காட் மூலம் செயல்படுத்துவதற்கு தேவையான வழி வகைகளை ஆய்வு செய்திடுமாறும் மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**